சுருக்கம்

வேளாண்மைத் துறை – தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு “குறுவை தொகுப்புத் திட்டம் 2018” ரூ.115.672 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து திட்டம் செயல்படுத்த ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.உ.1) துறை

அரசாணை ( 2D ) எண். 94 நாள்:15.06.2018

திருவள்ளுவர் ஆண்டு 2049, ஆனி 1

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.144, வேளாண்மை (வே.உ.2) துறை, நாள் 13.6.2017.
2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை, நாள் 08.06.2018.
3. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.நெ&சி 1/66655/2018, நாள்: 07.06.2018.
4. தலைமைப் பொறியாளர் (வே.பொ), கடித எண்.SC5/21134/2018, நாள் 08.06.2018 மற்றும் கடித எண்.AM1/20604/2018, நாள் 08.06.2018.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரின் 08.06.2018 நாளிட்ட குறிப்பு.

--------

ஆணை:

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும், திருச்சி, அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா மாவட்டங்களில் “குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் – 2017” செயல்படுத்தப்பட மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி ரூ.56.92 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேட்டூர் அணையின் நீர் இருப்பு போதுமானதாக இல்லாததால் குறுவை சாகுபடிக்காக அணையை ஜுன் 12–ஆம் தேதி அன்று திறந்துவிட இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, கால்வாய் பாசனம் இல்லாத காலங்களில் இதர நீர் ஆதாரங்களான வடிமுனைக் குழாய் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து பெறப்படும் நிலத்தடி தண்ணீரை மிகவும் சிக்கனமான முறையில் பயன்படுத்தி, நடப்பாண்டில் குறுகிய கால நெல் மற்றும் பயறு வகைப் பயிரையும் சாகுபடி செய்வதற்காக, காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி மேற்கொள்வது குறித்து **07.06.2018** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, குறுவை விவசாயிகளின் நலனை பாதுகாத்திட, **ரூ.115.672 கோடி செலவில், கீழ்கண்ட “குறுவை தொகுப்புத் திட்டம் 2018”**, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.06.2018 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

(த.பி.பா.)

I. கடந்த ஆறு ஆண்டுகளில் வழங்கியது போல், டெல்டா மாவட்டங்களுக்கு இந்த ஆண்டும் விவசாயத்திற்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்.

II. குறுவை பருவத்தில் 79,285 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கேற்ற வகையில், அதிக மகசூல் தரும் நெல் ரகங்களை குவிண்டாலுக்கு 1,750/– ரூபாய் மானியம் வீதம் 15,857 குவிண்டால் நெல் விதைகளை மானிய விலையில் விநியோகிப்பதற்கு 2 கோடியே 77 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

III. வேளாண் இயந்திரங்களைக் கொண்டு நெல் நடவு வயலை குறித்த காலத்தில் திறம்பட தயார் செய்வதற்காக, 870 பவர் டில்லர்களும், 860 ரோட்டவேட்டர்களும் 50 சதவீத மானியத்தில் விநியோகிப்பதற்காக, 11 கோடியே 94 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

IV. டெல்டா பகுதியில் உள்ள நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்கு சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பதிவு செய்த விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தை திரும்பப் பெற முன்வந்தால், 90 சதவீத மானியம் வழங்கப்படும். டெல்டா பகுதிகளில் 500 சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்கள் நிறுவுவதற்காக 22 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

V. மின் இணைப்பு கிடைக்கப் பெறாத டெல்டா விவசாயிகளுக்கு உதவும் வகையில், 2 ஆயிரம் டீசல் இன்ஜின்கள், 50 சதவீத பின்னேற்பு மானியத்தில் வழங்குவதற்காக, 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இத்தகைய வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெறுவதற்கு, அரசு அறிமுகப்படுத்தியுள்ள உழவன் கைபேசி செயலி மூலம் விவசாயிகள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

VI. நடவு இயந்திரங்களை கொண்டு நெல் நடவு செய்ய ஏக்கருக்கு 4,000/– ரூபாய் வீதம், ஒரு லட்சம் ஏக்கர் பரப்புக்கு இயந்திர நடவு மேற்கொள்ள, 100 சதவீத மானிய உதவித் தொகை வழங்கப்படும். இதற்காக தமிழ்நாடு அரசு 40 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்யும். நுண்ணூட்டச் சத்து குறைபாடுள்ள 40,000 ஏக்கர் பரப்பளவில், நெல் நுண்ணூட்டக் கலவை 50 சதவீத மானியத்தில் விநியோகிக்கப்படும்.

VII. டெல்டா மாவட்டங்களில் துத்தநாக சத்து குறைபாடு உள்ள இடங்களில், துத்தநாக சல்பேட் உரத்தை பயன்படுத்துவதற்கு, பின்னேற்பு மானியமாக ஏக்கருக்கு 200 ரூபாய் வீதம், 80 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு, ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், 30 ஆயிரம் ஏக்கரில் ஜிப்சம் பயன்படுத்துவதற்காக ஏக்கருக்கு முழு மானியமாக 600 ரூபாய் வீதம் பின்னேற்பு மானியமாக ஒரு கோடியே 80 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

VIII. குறைந்த நாட்களில், குறைந்த நீரில், அதிக லாபம் தரக்கூடிய பயறு வகைப் பயிர்களை 12,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு, 60 சதவீத மானியத்தில் தரமான விதைகள், 50 சதவீத மானியத்தில் திரவ உயிர் உரங்கள், பயறு நுண்ணூட்டக் கலவை மற்றும் இலை வழி டிஏபி உரம் தெளிக்கவும், ஒரு கோடியே 13 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

(த.பி.பா.)

IX. பயறு வகைகளில், சிக்கனமாக பாசன நீரைப் பயன்படுத்தும் வகையில், 2000 தெளிப்பு நீர் பாசன அமைப்புகளை நிறுவுவதற்கு சிறு குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து 100 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்குவதற்காக ஒரு கோடியே 99 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

X. காவேரி டெல்டா மற்றும் கல்லணை பாசனத்தின் கடைமடைப் பகுதியான வெண்ணாறு பகுதியின் மண் வளத்தினை அதிகரிக்கும் வகையில், பசுந்தாள் உர பயிர் சாகுபடி 15,000 ஏக்கரில் மேற்கொள்ள ஏக்கர் ஒன்றுக்கு 1,200/– ரூபாய் மானியத்தில் பசுந்தாளுர பயிர் விதைகள் விநியோகிக்கப்படும்.

XI. டெல்டா மாவட்ட விவசாயிகள், நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி, குறுவை சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் நோக்கில், 4 அங்குல விட்டம் மற்றும் 6 மீட்டர் நீளத்தில் 30 PVC குழாய்கள் கொண்ட அலகு ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வீதம் 1,500 அலகுகளுக்கு மானியம் வழங்குவதற்காக, 2 கோடியே 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

XII. டெல்டா மாவட்டங்களில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மட்டுமல்லாது, வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும், முதன் முறையாக குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தில், வேளாண் தொழிலாளர்களுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்கும் வகையில் வாய்க்கால்களை தூர்வாருதல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு குழி எடுத்து நடவு செய்தல், உரக்குழி அமைத்தல் போன்ற பணிகளுடன், சிறு, குறு விவசாயிகளின் வயல்களில் மண் வரப்புகளை அமைத்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்கு டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவர். இதற்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 24 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில் வேளாண்மை இயக்குநர், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) மற்றும் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியோரிடமிருந்து மேலே 3 முதல் 5 வரை படிக்கப்பட்ட கடிதங்களின் படி கருத்துருக்கள் பெறப்பட்டன. அதன்படி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு ரூ.115.672 கோடி செலவில் "குறுவை தொகுப்புத் திட்டம் 2018" செயல்படுத்திட கீழ்க்கண்டவற்றிற்கு அரசாணை கோரப்பட்டது.

(அ) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் ரூ.115.672 கோடியில் "குறுவை தொகுப்புத் திட்டம் 2018"–யினை செயல்படுத்தும் வகையில், ஒப்பளிப்பு வழங்குதல்.

(த.பி.பா.)

| குறுவை தொகுப்புத் திட்டம் 2018 – இனம் வாரியான மானியத் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | திட்ட இனங்கள் | இலக்கு | மானியத் தொகை அலகு ஒன்றுக்கு (ரூ) | மானிய விகிதம் (சதவீதத்தில்) | மொத்த மானியத் தொகை (ரூ. கோடியில்) |
| அ | **நெல் சாகுபடி ஊக்குவித்தல்** | | | | |
| 1 | நெல் விதை விநியோகம் (குவிண்டால்) | 15857 | 1750 | 50 | 2.775 |
| 2 | நெல் இயந்திர நடவுக்கான ஊக்கத்தொகை (ஏக்கர்) | 100000 | 4000 | 100 | 40.000 |
| 3 | நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம் (ஏக்கர்) | 40000 | 80 | 50 | 0.320 |
| 4 | துத்தநாக சல்பேட் உபயோகத்திற்கான மானியம் (ஏக்கர்) | 80000 | 200 | 50 | 1.600 |
| 5 | ஜிப்சம் உபயோகத்திற்கான மானியம் (ஏக்கர்) | 30000 | 600 | 100 | 1.800 |
| | | | | மொத்தம் | 46.495 |
| ஆ | **பயறுவகை சாகுபடியினை ஊக்குவித்தல்** | | | | |
| 6 | பயறுவகை விதை விநியோகம் (ஏக்கர்) | 12500 | 384 | 60 | 0.480 |
| 7 | பயறுவகைகளுக்கான திரவ உயிர் உரங்கள் விநியோகம் (ஏக்கர்) | 12500 | 60 | 50 | 0.075 |
| 8 | பயறுவகைகளுக்கான நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம் (ஏக்கர்) | 12500 | 200 | 50 | 0.250 |
| 9 | டி.ஏ.பி இலை வழி உரத் தெளிப்புக்கான உதவித்தொகை (ஏக்கர்) | 12500 | 260 | 50 | 0.325 |
| | | | | மொத்தம் | 1.130 |
| இ. | **இயந்திரங்கள் மற்றும் பொது இனங்கள்** | | | | |
| 10 | இயந்திர உழுவை விநியோகம் (எண்கள்) | 870 | 75000 | 50 | 6.525 |
| 11 | சுழற்கலப்பை விநியோகம் (எண்கள்) | 860 | 63,000 | 50 | 5.418 |
| 12 | பாசன நீர் குழாய்களுக்கான உதவித்தொகை (அலகுகள்) | 1500 | 15000 | 50 | 2.250 |
| 13 | வெண்ணாறு பகுதிகளுக்கான பசுந்தாள் உர விதை விநியோகம் (ஏக்கர்) | 15000 | 1200 | 100 | 1.800 |
| 14 | சோலார் பம்ப் செட் விநியோகம் (எண்கள்) (•) | 500 | 450000 | 90 | 22.500 |
| 15 | டீசல் என்ஜின் விநியோகம் (எண்கள்) | 2000 | 15000 | 50 | 3.000 |
| 16 | நீர் தெளிப்பான்கள் விநியோகம் (எண்கள்) | 2000 | 9968 | 75 | 1.994 |
| 17 | விளம்பரம் மற்றும் ஆவணப்படுத்துதல் | | | | 0.060 |
| | | | | மொத்தம் | 43.547 |
| | | | | ஆக மொத்தம் | 91.172 |
| 18 | டெல்டா மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி அடிப்படையிலான சிறப்புப் பணி வழங்குதல் (••) | | | | 24.500 |
| | | | | **கூட்டு மொத்தம்** | **115.672** |
| | (•) டான்ஜட்கோ நிதி 30 சதவீதம் ரூ.7.50 கோடி; எம்.என்.ஆர்.இ நிதி 20 சதவீதம் ரூ.4.25 கோடி மாநிலத்திலிருந்து வழங்கப்படும்; மீதம் 40 சதவீத மாநில நிதி ரூ.10.75 கோடி நடப்பு திட்டங்களிலிருந்து வழங்கப்படும். | | | | |
| | (••) வாய்க்கால்கள் தூர் வாருதல்; பண்ணைக் குட்டை; சிறு குட்டைகள், தோட்டக்கலை மரங்கள் நடுதல், தொழு உர குழிகள் அமைத்தல் போன்ற பணிகள் ஊரக வளர்ச்சித் துறையினால் மேற்கொள்ளப்படும். | | | | |

(த.பி.பா.)

(ஆ) திட்ட இனங்களில் நிதி சேமிப்பு ஏதும் இருப்பின், ஒப்புதல் வழங்கப்பட்ட திட்ட இனங்களில், கூடுதல் பரப்பில் செயல்படுத்த அனுமதி வழங்குதல்.

(இ) வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின் திருத்திய / இறுதி திருத்த நிதி ஒதுக்கம் 2018–19–இல் எதிர்நோக்கி, நிதியை பெற்று செலவிட வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் வழங்குதல்.

(ஈ) விளம்பரம், ஆவணப்படுத்துதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான விளம்பர செலவினத் தொகை ரூ.6.00 இலட்சம் நிதியினை தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட நிர்வாக செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு வழங்க தமிழ்நாடு வடிநீர் மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்குதல்.

(உ) வேளாண்மைத் துறையால் செயல்படுத்தும் இனங்களுக்கான மானியத் தொகையை விடுவிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண் இணை இயக்குநர்கள் / வட்டார வேளாண் உதவி இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்கிட திட்டம் செயல்படுத்தும் அமைப்பாக உள்ள வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி வழங்குதல். அதைப்போல வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த மானியத் தொகையை விடுவிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுமதி வழங்குதல்.

(ஊ) குறுவை தொகுப்புத் திட்டம் 2018–க்கான வரவு செலவுத் திட்டம், கட்டுப்படுத்துதல் மற்றும் நிதிஒதுக்கம் ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்குதல்

(எ) பல்வேறு மத்திய அரசு திட்டங்களிலிருந்து நிதி மாற்றம் செய்வதற்கு மாநில நிதி ஒப்பளிப்பு குழு / செயற்குழுவிடம் பின்னேற்பு ஆணை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுமதி வழங்குதல்.

4. வேளாண்மை இயக்குநர், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) மற்றும் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியோரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து, பரிசீலனைக்குப் பின்னர் அக்கருத்துருவை ஏற்று குறுவை தொகுப்புத் திட்டம்–2018–ஐ செயல்படுத்திட ரூ.115.672 கோடி ஒப்பளிப்பு செய்ய அரசு முடிவெடுத்து கீழ்க்கண்ட திட்டங்களிலிருந்து தொகையினைச் செலவிட ஒப்பளிப்பு ஆணை வழங்குகிறது.

(த.பி.பா.)

| குறுவை தொகுப்புத் திட்டம் 2018 – இனம் வாரியான மானியத் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | திட்ட இனங்கள் | இலக்கு | மானியத் தொகை அலகு ஒன்றுக்கு (ரூ) | மானிய விகிதம் (சதவீதத்தில்) | மொத்த மானியத் தொகை (ரூ. கோடியில்) |
| அ | நெல் சாகுபடி ஊக்குவித்தல் | | | | |
| 1 | நெல் விதை விநியோகம் (குவிண்டால்) | 15857 | 1750 | 50 | 2.775 |
| 2 | நெல் இயந்திர நடவுக்கான ஊக்கத்தொகை (ஏக்கர்) | 100000 | 4000 | 100 | 40.000 |
| 3 | நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம் (ஏக்கர்) | 40000 | 80 | 50 | 0.320 |
| 4 | துத்தநாக சல்பேட் உபயோகத்திற்கான மானியம் (ஏக்கர்) | 80000 | 200 | 50 | 1.600 |
| 5 | ஜிப்சம் உபயோகத்திற்கான மானியம் (ஏக்கர்) | 30000 | 600 | 100 | 1.800 |
| | | | | மொத்தம் | 46.495 |
| ஆ | பயறுவகை சாகுபடியினை ஊக்குவித்தல் | | | | |
| 6 | பயறுவகை விதை விநியோகம் (ஏக்கர்) | 12500 | 384 | 60 | 0.480 |
| 7 | பயறுவகைகளுக்கான திரவ உயிர் உரங்கள் விநியோகம் (ஏக்கர்) | 12500 | 60 | 50 | 0.075 |
| 8 | பயறுவகைகளுக்கான நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம் (ஏக்கர்) | 12500 | 200 | 50 | 0.250 |
| 9 | டி.ஏ.பி இலை வழி உரத் தெளிப்புக்கான உதவித்தொகை (ஏக்கர்) | 12500 | 260 | 50 | 0.325 |
| | | | | மொத்தம் | 1.130 |
| இ. | இயந்திரங்கள் மற்றும் பொது இனங்கள் | | | | |
| 10 | இயந்திர உழுவை விநியோகம் (எண்கள்) | 870 | 75000 | 50 | 6.525 |
| 11 | சுழற்கலப்பை விநியோகம் (எண்கள்) | 860 | 63,000 | 50 | 5.418 |
| 12 | பாசன நீர் குழாய்களுக்கான உதவித்தொகை (அலகுகள்) | 1500 | 15000 | 50 | 2.250 |
| 13 | வெண்ணாறு பகுதிகளுக்கான பசுந்தாள் உர விதை விநியோகம் (ஏக்கர்) | 15000 | 1200 | 100 | 1.800 |
| 14 | சோலார் பம்ப் செட் விநியோகம் (எண்கள்) (•) | 500 | 450000 | 90 | 22.500 |
| 15 | டீசல் என்ஜின் விநியோகம் (எண்கள்) | 2000 | 15000 | 50 | 3.000 |
| 16 | நீர் தெளிப்பான்கள் விநியோகம் (எண்கள்) | 2000 | 9968 | 75 @ | 1.994 |
| 17 | விளம்பரம் மற்றும் ஆவணப்படுத்துதல் | | | | 0.060 |
| | | | | மொத்தம் | 43.547 |
| | | | | ஆக மொத்தம் | 91.172 |
| 18 | டெல்டா மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி அடிப்படையிலான சிறப்புப் பணி வழங்குதல் (••) | (MGNREGS – இன் விதிமுறைகளின்படி) | | | 24.500 |
| | | | | கூட்டு மொத்தம் | 115.672 |
| | (•) டான்ஜட்கோ நிதி 30 சதவீதம் ரூ.7.50 கோடி; எம்.என்.ஆர்.இ நிதி 20 சதவீதம் ரூ.4.25 கோடி மாநிலத்திலிருந்து வழங்கப்படும்; மீதம் 40 சதவீத மாநில நிதி ரூ.10.75 கோடி நடப்பு திட்டங்களிலிருந்து வழங்கப்படும். | | | | |
| | (••) வாய்க்கால்கள் தூர் வாருதல்; பண்ணைக் குட்டை; சிறு குட்டைகள், தோட்டக்கலை மரங்கள் நடுதல், தொழு உர குழிகள் அமைத்தல் போன்ற பணிகள் ஊரக வளர்ச்சித் துறையினால் மேற்கொள்ளப்படும்.<br>@ சிறு, குறு விவசாயிகளுக்கு (Small/Marginal farmers) 100 சதவீதம் மானியம் மற்றும் இதர விவசாயிகளுக்கு (other Farmers) 75 சதவீதம் மானியம். | | | | |

(த.பி.பா.)

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு "குறுவை தொகுப்புத் திட்டம் 2018" இவ்வாணையின் **பிற்சேர்க்கை I மற்றும் II-இல்** கண்டுள்ள விவரங்களின்படி, செயல்படுத்திட வேளாண்மை இயக்குநர், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) மற்றும் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:–

I. <u>வேளாண்மை இயக்குநர்</u>

i. <u>தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்</u>

(ரூ.இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry - 800 other expenditure – Schemes Shared between State and Centre – UF – National Agricultural Development Programme (NADP-RKVY) Agriculture Department. | 11 Subsidies | 01 Individual based Subsidy | 2401-00-800-UF-1111 | 2088.206 |
| 2401-00- Crop Husbandry – 793 Special Central Assistance for Scheduled Castes Component Plan – Schemes Shared between State and Centre – UL – National Agricultural Development Programme (NADP - RKVY) under Special component plan – Agriculture department | 11 Subsidies | 01 individual based Subsidy | 2401-00-793-UL-1116 | 790.469 |
| 2401-00- Crop Husbandry – 794 – Special Central Assistance for Tribal Sub Plan – Schemes Shared between State and Centre – UH – National Agricultural Development Programme (NADP - RKVY) – Agriculture department | 11 Subsidies | 01 individual based Subsidy | 2401-00-794-UH-1112 | 33.825 |
| | | | **Sub total** | **2912.500** |
| TAWDEVA – Administrative fund for advertisement and publicity | | | | **6.000** |
| | | | **Total** | **2918.500** |
| Includes Strategic Rice Production Programme fund - Rs. 2796.00 Lakh +Enrichment of Soil Fertility through Green Manure Seed Distribution fund - Rs. 90.00 lakh and NADP Unspent amount of Rs. 32.50 Lakh.<br>The Subsidy Assistance for procurement of 520 Power Tillers and 60 Rotavators will be met from National Agriculture Development Programme fund. | | | | |

(த.பி.பா.)

## ii. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்

(ரூ. இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry – 112-Development of Pulses – Schemes shared between State and Centre UB - National Food Security Mission | 09 – Grants in Aid | 03 – Grants for Specific Schemes | 2401-00-112-UB -0931 | 329.400 |
| 2401-00- Crop Husbandry-793-Special Central Assistance for Schedule Castes Component Plan – Schemes shared between State and Centre- UN - National Food Security Mission | 09 – Grants in Aid | 03 – Grants for Specific Schemes | 2401-00-793-UN-0935 | 69.255 |
| 2401-00- Crop Husbandry- 794 - Special Central Assistance for Traibal Sub - Plan Schemes shared between State and Centre – UJ National Food Security Mission | 09 – Grants in Aid | 03 – Grants for Specific Schemes | 2401-00-794-UJ-0931 | 3.645 |
| | **Sub total** | | | **402.300** |
| Includes NFSM Rice fund Rs. 257.00 Lakh + NFSM Pulses fund Rs. 145.30 Lakh | | | | |

## iii. வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய இயக்கம் – விதை மற்றும் நடவு பொருள்களுக்கான துணை இயக்கம் (விதை கிராமத் திட்டம்)

(ரூ.இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry 102- Food Grain Crops -Schemes Shared Between State and Centre- UC- Production and Distribution of Quality Seeds | 09-Grants in Aid | 03 Grants for specific schemes | 2401-00-102-UC-0930 | 82.410 |
| 2401-00-Crop Husbandry 793- Special Central Assistance for Schedule Castes Component Plan -Schemes Shared Between State and Centre- UM - Production and Distribution of Quality Seeds | 09-Grants in Aid | 03 Grants for specific schemes | 2401-00-793 UM-0937 | 16.080 |
| 2401-00-Crop Husbandry 794- Special Central Assistance for Traibal Sub Plan -Schemes Shared Between State and Centre- UI - Production and Distribution of Quality Seeds | 09-Grants in Aid | 03 Grants for specific schemes | 2401-00-794 UI-0933 | 2.010 |
| | **Total** | | | **100.500** |

(த.பி.பா.)

iv. <u>மாநில நிதி</u>

(ரூ.இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry - 105 - Manures and Fertilizers States's Expenditure – JS – Kuruvai Special Package for Cauvery Delta Districts. | 11 Subsidies | 01 Individual based subsidy | 2401-00-00 - 105 -JS - 1110 | 2180.00 |
| | **Total** | | | **2180.00** |

II. <u>தலைமைப் பொறியாளர் (வே.பொ.)</u>

i. **350** இயந்திர உழுவை (Power Tillers - 8 BHP and above) மற்றும் **800** சுழற் கலப்பை (Rotavator) டெல்டா விவசாயிகள் கொள்முதல் செய்வதற்கு வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணை இயக்கத்தின் கீழ் ரூ.**7.665** கோடியில் மானியமாக வழங்கப்படும்.

(ரூ.இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2401-00- Crop Husbandry-113. Agricultural Engineering- Schemes shared between state and centre. UB-Sub Mission on Agricultural Mechanization | 11- Subsidies | 01-Individual based subsidy | 2401-00-113-UB-1116 | 597.00 |
| 2401-00-Crop Husbandry- 793 Special Central Assistance for Scheduled Caste Component Plan - Schemes shared between state and centre. US-Sub Mission on Agricultural Mechanization | 11- Subsidies | 01- Individual based subsidy | 2401-00-793-US-1112 | 169.50 |
| Total | | | | 766.50 |

ii. **ரூ.22.500 கோடி செலவில் 500 எண்கள் சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்தல்** – டெல்டா விவசாயிகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இலவச மின் இணைப்பிற்கு பதிவு செய்தவர்கள், தங்கள் விண்ணப்பத்தினை திரும்பப் பெற முன் வரும் பட்சத்தில், அவர்களுக்கு 90% மானியம் வழங்கப்படும்.

(த.பி.பா.)

மொத்த திட்ட செலவு = ரூ.25.00 கோடி

மாநில நிதி : ரூ.22.50 கோடி (90% மானிய உதவி)

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) பங்கு - 30%,
- மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE)– 20% (மத்திய அரசிடம் திரும்பப் பெறுதல்) மற்றும்
- மாநில பங்கு – 40%

- <u>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பங்கு (TANGEDCO):</u>

விவசாயிகளிடம் 10% பங்களிப்பு தொகையினை பெற்று, பணியாணை வழங்கப் பெற்ற பின்னர், பணியாணை நகல் மற்றும் விவசாயிகளிடமிருந்து தங்களுடைய இலவச மின் இணைப்பிற்கான விண்ணப்பத்தை திரும்பப் பெறுவதற்கான சம்மத கடித நகல் ஆகியவற்றை வேளாண்மை பொறியியல் துறை அளித்தவுடன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் பங்கான 30% மானியத் தொகை ரூ.7.50 கோடி வேளாண்மை பொறியியல் துறைக்கு வழங்கப்படும்.

- <u>மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE):-</u>

சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டு அமைக்க ரூ.85,000/–, ஒரு குதிரைத் திறனுக்கு, வரையறுக்கப்பட்ட விலையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில் 20% மத்திய நிதி உதவியாக ஒரு குதிரைத் திறனுக்கு ரூ.17,000/– வழங்கப்படுகிறது. மேலும், 5 முதல் 10 குதிரைத் திறன் வரையிலான சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டிற்கு ரூ.85,000/– மட்டுமே மத்திய நிதி உதவியாக வழங்கப்படுகிறது. எனவே, விவசாயிகளுக்கு வழங்கப்படும் 500 எண்களுக்குரிய தகுதியுடைய மத்திய அரசின் மானியத் தொகையான ரூ.4.25 கோடி, திட்டம் செயலாக்கம் செய்த பின்னர் திட்ட முடிவறிக்கையினை மத்திய அரசிற்கு சமர்ப்பித்து திரும்பப் பெறப்படும். (அரசாணை (நிலை) எண்.217, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 31.08.2017–இன் படி).

(ரூ.இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2810-New and Renewable Energy – 02 solar – 800 other expenditure – Central sector schemes – SA – New and Renewable Energy Scheme | 11 subsidies | 01 individual subsidy | 2810-02-800-SA-1116 | 425.00 |

(த.பி.பா.)

- <u>மாநில பங்கு:–</u>

மீதமுள்ள தொகை ரூ.10.75 கோடி மாநில நிதியிலிருந்து பின்வருமாறு வழங்கப்படும்.

(ரூ.இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2402 – 00 - Soil and Water Conservation-102-Soil Conservation schemes –State's Expenditure - KA-Provision of solar powered pumping system | 11 Subsidies | 01-Individual based subsidy | 2402-00-102-KA-1110 | 1075.00 |

இத்திட்டங்களை செயல்படுத்திட மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தலைமை பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் (SMAM) திட்டத்தினை செயல்படுத்தும் போது அதற்குண்டான வழிகாட்டு நெறிமுறைகளை (Guidelines) தவறாது கடைபிடிக்கும்படி தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

**iii.** <u>**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (MGNREGS)**</u>

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் வேளாண் கூலித் தொழிலாளர்கள் பயன்படும் வகையில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அவர்கள் தனி கவனம் செலுத்தி செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

| வ.எண். | ஊரக வளர்ச்சி திட்ட பணி விவரம் | அலகு | செலவினம் /அலகு ஒன்றுக்கு(ரூ.) | மொத்த செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வாய்க்கால்கள் தூர்வாருதல் | 500 கி.மீ. | 2,80,000 | 14,00,00,000 |
| 2 | பண்ணைக் குட்டைகள் | 300 (எண்ணில்) | 1,00,000 | 3,00,00,000 |
| 3 | தொழுஉரக் குழிகள் | 2500 (எண்ணில்) | 13,500 | 3,37,50,000 |
| 4 | நில மேம்பாட்டுக் பணிகள் | 150 (ஹெக்டரில்) | 1,00,000 | 1,50,00,000 |
| 5 | மண் வரப்புகள் அமைத்தல் | 200 கி.மீ. | 1,30,000 | 2,60,00,000 |
| | மொத்தம் | | | 24,47,50,000 |
| முழுமையாக்கப்பட்ட செலவினம் 24.50 கோடி | | | | |
| விரிவான பணி விவரங்கள் பிற்சேர்க்கை –II இல் இணைக்கப்பட்டுள்ளது. | | | | |

(த.பி.பா.)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சி பணிகளுக்கான நிதி ரூ.24.50 கோடி பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் வழங்கப்படும்.

(ரூ.இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | விரிவான தலைப்பு | விரிவான உட் தலைப்பு | தகவல் தொகுப்பு குறியீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 2505 – Rural Employment – 02 Rural Employment Guarantee Scheme – 101 – National Rural Employment Guarantee Scheme – Scheme shared between State and Centre – UA Mahatma Gandhi Rural Employment Guarantee Scheme | 09 Grants in Aid | 03 Grants for Specific Schemes | 2505 – 02 – 101 – UA – 09319 | 2450.00 |

**iv. பிரதம மந்திரி விவசாய நீர் பாசனத் திட்டம் (PMKSY)**

**a) 2000 டீசல் என்ஜின்கள்:–**

மின் இணைப்பு கிடைக்கப் பெறாத டெல்டா விவசாயிகளுக்கு 2000 டீசல் என்ஜின்கள் 50% பின்னேற்பு மானிய விலையில் வழங்குவதற்கு பிரதம மந்திரி நீர்பாசன திட்டம் – "துளி நீர் அதிக பயிர்" (Per Drop - More Crop) நுண்ணீர் பாசனத் திட்டம் 2017–18–இல் ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட நிதியிலிருந்து ரூ.3.00 கோடி பயன்படுத்தப்படும். இத்தொகை "துளி நீர் அதிக பயிர்" நுண்ணீர் பாசனத் திட்டம் 2018–19–இன் கீழ் மத்திய அரசின் நிதி பெறப்பட்டவுடன் சரிகட்டப்படும்.

**b) 2000 நீர்த் தெளிப்பான்கள்**

பயறு வகைகளில், சிக்கனமாக பாசன நீரைப் பயன்படுத்தும் வகையில், 2000 தெளிப்பு நீர் பாசன அமைப்புகளை நிறுவுவதற்கு, ரூ.1.994 கோடி, சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் வழங்குவதற்கு ஏற்கனவே பிரதம மந்திரி விவசாய நீர்பாசனத் திட்டம் – "துளி நீர் அதிக பயிர்" நுண்ணீர் பாசனத் திட்டம் 2017–18–இன் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வேளாண்மை இயக்குநரகத்தில் உள்ள இருப்பு நிதி பயன்படுத்தப்படும்.

7. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2018–19– ஆம் நிதியாண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2018–19–ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, வேளாண்மை இயக்குநர், தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4–இல்

(த.பி.பா.)

அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்குரிய கருத்துருவை 2018–19–ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாது உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொ.1/வேளாண்மை) துறைக்கு அனுப்புமாறு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. குறுவை தொகுப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் பொழுது, வேளாண்மைத் துறையினால் செயல்படுத்தப்படும் திட்ட இனங்களில் ஏதேனும் நிதி சேமிப்பு ஏற்பட்டால், அதனை கூடுதல் பரப்பிற்கு பயன்படுத்திக் கொள்ளவும், சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண் இணை இயக்குநர்கள் / வட்டார வேளாண் உதவி இயக்குநர்களுக்கு மானியத் தொகையை விடுவிக்க அதிகாரம் வழங்கிட, இத்திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பாக உள்ள வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9. இத்திட்டத்தினை விளம்பரப்படுத்தவும், ஒப்பந்த புள்ளிகள் கோரும் பணிக்கும், ஆவணப்படுத்தும் பணிக்கும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையில் பராமரிக்கப்படும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட நிர்வாக செலவின நிதியிலிருந்து ரூ.6.00 இலட்சம் பெற்று, வேளாண்மை இயக்குநருக்கு வழங்கிட தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

10. குறுவை தொகுப்புத் திட்டம் 2018–க்கான வரவு செலவுத் திட்டம், கட்டுப்படுத்துதல் மற்றும் நிதி ஒதுக்கம் ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

11. பல்வேறு மத்திய அரசு திட்டங்களிலிருந்து நிதி மாற்றம் செய்வதற்கு மாநில நிதி ஒப்பளிப்பு குழு / செயற்குழுவிடம் பின்னேற்பு ஆணை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

12. “குறுவைத் தொகுப்புத் திட்டம் 2018” செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு முறைகள் தனியாக வெளியிடப்படும்.

13. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அத்துறையின் அ.சா.கு.எண். 31137/வேளாண்மை/2018, நாள்: 15.6.2018, கூடுதல் ஒப்பளிப்பு பேரேடு எண்.433 (நானூற்று முப்பத்து மூன்று) –இன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை 5,
தலைமைப் பொறியாளர்( வேளாண்மை பொறியியல்), சென்னை–35
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பனகல் பார்க், சென்னை–15.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை–5.

(த.பி.பா.)

செயல் அலுவலர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை–32
சம்பள கணக்காளர் (கிழக்கு/தெற்கு) சென்னை 8/35 (பெயரில்)
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, கடலூர், கரூர், புதுக்கோட்டை மற்றும் அரியலூார் மாவட்டங்கள்.
கருவூல அலுவலர்கள் – உரிய மாவட்டங்கள்.
முதன்மை மாநில கணக்காயர் (A&E/G&SSA/E&RA/AAD) சென்னை 8. (பெயரில்)

**நகல்**
இயக்குநர், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு, கோவை 13.
இயக்குநர், STAMIN, குடுமியான்மலை, புதுக்கோட்டை மாவட்டம்.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை 3.
நிதி (Agriculture/BG-1/BG II) துறை, சென்னை 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை 9.
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக எழுத்தர், சென்னை 9,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மறும் அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், வேளாண்மைத் துறை, சென்னை 9.
வேளாண்மை (அந 3/வேஉ 1/வேஉ3/வெபொ 1) துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

15.6.18

பிரிவு அலுவலர்

15.6.18

**இணைப்பு –I**

**அரசாணை (2டி) எண் 94, வேளாண்மை (வே.உ.1) துறை, நாள் 15.06.2018.**

**சுருக்கம்**

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த மானியத் தொகை (ரூ. கோடியில்) | நிதி ஆதாரம் (ரூ. கோடியில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (NADP ) | தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (NFSM) | விதை மற்றும் இடுபொருட் களுக்கான துணை இயக்கம் (SVP) | வேளாண் இயந்திரங் களுக்கான துணை இயக்கம் (SMAM) | நுண்ணீர் பாசனத் திட்டம் (PMKSY-MI) | கூடுதல் மாநில நிதி (Addl. State Fund) |
| 1 | நெல் சாகுபடி ஊக்குவித்தல் | 46.495 | 22.500 | 2.570 | 0.525 | 0.000 | 0.000 | 20.900 |
| 2 | பயறுவகை சாகுபடியினை ஊக்குவித்தல் | 1.130 | 0.325 | 0.325 | 0.480 | 0.000 | 0.000 | 0.000 |
| 3 | *இயந்திரங்கள் மற்றும் பொது இனங்கள் | 43.547 | 6.360 | 1.128 | 0.000 | 7.665 | 4.994 | 23.400 |
| 4 | ஊரக வளர்ச்சித் திட்ட பணி | 24.500 | 0.000 | 0.000 | 0.000 | 0.000 | 0.000 | 0.000 |
| **மொத்தம்** | | **115.672** | **29.185** | **4.023** | **1.005** | **7.665** | **4.994** | **44.300** |
| * வேளாண்மைத் துறை | | 13.382 | 6.360 | 1.128 | 0.000 | 0.000 | 4.994 | 0.900 |
| வேளாண்மை பொறியியல் துறை | | 30.165 | 0.000 | 0.000 | 0.000 | 7.665 | 0.000 | 22.500 |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## Annexure- II

### G.O.(2D) No.94, Agriculture (AP1) Department, dated 15.06.2018

### Details of Works under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme for Kuruvai Package-2018

| Sl. No. | Name of Work | Unit Cost (in Rs.) | Mandays to be generated @ Rs.224/day | Labour Component (in Rs)/unit | Material Component (in Rs) / unit | No. of Works | Labour Component (Rs. in lakhs) | Material Component (Rs. in lakh) | | Central Share including 100% labour component cost (Rs. in lakh) | State share (Rs. in lakh) | total Cost (Rs. in lakh) | Total No. of persondays |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 75% | 25% | | | | |
| 1 | Land development activities | 10000 | 433 | 96992 | 3008 | 150 | 145.488 | 3.384 | 1.128 | 148.872 | 1.128 | 150.000 | 64950 |
| 2 | Earthen Bundling | 130000 | 567 | 127008 | 2992 | 200 | 254.016 | 4.488 | 1.496 | 258.504 | 1.496 | 260.000 | 113400 |
| 3 | Farm pond | 100000 | 433 | 96992 | 3008 | 300 | 290.976 | 6.768 | 2.256 | 297.744 | 2.256 | 300.000 | 129900 |
| 4 | Compost pit | 13500 | 17 | 3808 | 9692 | 2500 | 95.200 | 181.725 | 60.575 | 276.925 | 60.575 | 337.500 | 42500 |
| 5 | Desilting of Supply Channels | 280000 | 1230 | 275520 | 4480 | 500 | 1377.600 | 16.800 | 5.600 | 1394.400 | 5.600 | 1400.000 | 615000 |
| | Total | | | | | 3650 | 2163.280 | 213.165 | 71.055 | 2376.445 | 71.055 | 2447.500 | 965750 |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

15.6.18

பிரிவு அலுவலர்
15.6.18